பக்கங்கள்: 07
காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 21 சனிக்கிழமை 05.03.2022 கதிர் 346

## புதுக்குடியிருப்பிலும் தீப்பந்தப் போராட்டம்

மின்வெட்டு, எரிபொருள் தட்டுப்பாடு போன்றவற்றைக் கண்டித்து புதுக்குடியிருப்பில் தீப்பந்தக் கவனவீர்ப்பு நடவடிக்கை நேற்று இரவு முன்னெடுக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் அதன் வன்னி மாவட்ட அமைப்பாளர் மு.லக்சிகன் தலைமையில் இந்தத் தீ பந்தக் கவனவீர்ப்பு முன்னெடுக்கப்பட்டது.

# நான் 'ரீ' குடிக்க யாழ்ப்பாணம் வரவில்லை!

## அபிவிருத்தியைத் துரிதப்படுத்தவே ஒருங்கிணைப்புக் குழுவில் நியமிக்கப்பட்டிருக்கின்றேன் என அங்கஜனுக்கு கீதநாத் பதிலடி






யாழ்ப்பாணம் மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகளைத் துரிதப்படுத்தவே யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் நான் பிரதமரின் நேரடிப் பணிப்பின் பேரில் நியமிக்கப்பட்டிருக்கின்றேனே தவிர ரீயும், வடையும் சாப்பிட்டுச் செல்வதற்கல்ல என்று தெரிவித்தார் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் பிரதமரின் இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள காசிலிங்கம் கீதநாத்.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவரான அங்கஜன் இராமநாதன் முன்வைத்த கருத்துக்கள் தொடர்பில் ஊடகங்கள் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எனக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகார வரம் என்பது பிரதமரூடாக நேராக அணுக வேண்டிய பிரச்சினைகளுக்குத் துரிதமான தீர்வைப் பெற்றுக்கொடுப்பதாகும். மாவட்டத்தின் அபிவிருத்திகளைத் துரிதப்படுத்தும் முகமாக பிரதமரின் நேரடிப் பணிப்பின் கீழேயே இந்தப் பதவி எனக்கு

☞2

# அவப்பெயருடனும் அழிவுடனும் முடிவுக்கு வரும் கோட்டா அரசு!



## அடித்துக் கூறுகின்றது சு.க.

கொழும்பு, மார்ச் 05

அவப்பெயருடனும் அழிவுடனும் கோட்டாபய அரசு நிறைவுக்கு வரும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் ஆளுந்தரப்பின் 11 பிரதான பங்காளிக் கட்சிகள் இணைந்து 'முழு நாடும் சரியான பாதை'க்கு என்ற தொனிப்பொருளில் தேசிய கொள்கைத் திட்டமொன்றை வெளியிட்டிருந்தன.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில மிகவும் காரசாரமாக உரையாற்றியிருந்ததோடு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் தீர்மானங்களையும் கடுமையாக விமர்சித்திருந்தனர்.

☞2

# கோட்டா அரசின் நிலை இனி அதோகதிதான்!

## ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சி மலர சகலரும் ஒத்துழையுங்கள் எனச் சஜித் அறைகூவல்



அரச கூட்டுக்குள் உட்கட்சி மோதலைக்கூடச் சமாளிக்க முடியாமல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திண்டாடுகின்றார் என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

☞2



# பஸிலுடன் மோதல் எதுவுமே இல்லை!

## விமலின் கருத்துக்கு கப்ரால் பதிலடி

நிதி அமைச்சருக்கும் தனக்கும் இடையில் முரண்பாடு எதுவும் இல்லை என்று மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கும்,

☞2

## சஜித் அணியின் 'ஓயாத அலை' 15இல் ஆரம்பம்

அரச கூட்டணிக்குள் மோதல் ஏற்பட்டு அமைச்சர்கள் இருவர் வெளியேற்றப்பட்டுள்ள சூழ்நிலையில், அரசுக்கு எதிராகத் தொடர் போராட்டங்களை நடத்துவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் 'ஓயாத அலை' எனும் பெயரின் கீழ் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் இந்த அரச எதிர்ப்பு நடவடிக்கை ஆரம்பமாகவுள்ளது என ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சஜித் தலைமையில் நேற்று நடைபெற்ற முக்கிய கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.



## மாத்தளையில் போராட்டம்

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முற்றாக நீக்கக் கோரிக்கையெழுத்துப் போராட்டம் இன்று மாத்தளை நகரில் நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன் ஆகியோரின் ஏற்பாட்டில்

☞2

## தமிழரசின் மகளிர் தின நிகழ்வில் பிரதம அதிதியாக இந்திய அதிகாரி

(ந.லோகதயாளன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட மகளிர் அணியின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு எதிர்வரும் 7ஆம் திகதி பசுமைப் பூங்கா வளாகத்தில் நடைபெறவுள்ளது.

தமிழரசுக் கட்சியின் மாவட்ட மகளிர் அணித் தலைவர் கௌசலா ஜெயக்காந்தராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இலங்கைக்கான

☞2




## கோட்டா அரசின் நிலை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், நாடு இன்று பொருளாதார ரீதியில் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை ஜனாதிபதி எப்படித் தீர்க்கப் போகின்றார் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

அரசில் அங்கத்துவம் வகித்துக் கொண்டு கூட்டுப் பொறுப்பை மீறும் வகையில் செயற்பட்டனர் எனக் கூறி விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகிய இருவரும் ஜனாதிபதியால் பதவி நீக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் நிலைமை மிகவும் மோசமடைந்துவிட்டது. இந்த அரசை அரசுக்குள் இருப்பவர்களே வெறுக்கத் தொடங்கியுள்ளனர். அதன் வெளிப்பாடாகவே விமல், கம்மன்பிலவின் அமைச்சுப் பதவிகள் ஜனாதிபதியால் பறிக்கப்பட்டுள்ளன.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அனுமதியின்றி இருவரும் அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. இதுதான் வேடிக்கையாக இருக்கின்றது.

எனவே, அரசுக்குள் ஒட்டிக்கொண்டிருப்பவர்கள் அனைவரும் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும்.

அரசின் நிலை இனி அதோகதிதான். மக்கள் அனைவரும் அரசுக்கு எதிரான போராட்டங்களை மென்மேலும் தீவிரப்படுத்த வேண்டும்.

நாட்டை நேசிக்கும் அனைவரும் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான ஆட்சி விரைவில் மலர ஒத்துழைக்க வேண்டும் - என்றார்.

## அவப்பெயருடனும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையிலேயே, அரசில் அங்கத்துவம் வகித்துக் கொண்டு கூட்டுப் பொறுப்பை மீறும் வகையில் செயற்பட்டனர் எனக் கூறி இவ்விருவரும் ஜனாதிபதியால் பதவி நீக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பேராசிரியர் ரோஹண லக்ஸ்மன் பியதாஸ ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போது கூறியதாவது:-

ஆளுந்தரப்பின் 11 பங்காளிக் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எவரையும் தனிமைப்படுத்திவிடக் கூடாது என்று கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன ஆலோசனை வழங்கியுள்ளார்

ஆளுந்தரப்பின் கூட்டணியிலுள்ள அனைத்துக் கட்சிகளையும் அழைத்து கலந்தாலோசிப்பதை விடுத்து, இவ்வாறு அமைச்சர்களைப் பதவி நீக்கியுள்ளமையானது தலை வலிக்கு தலையணையை மாற்றும் செயற்பாடாகும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வெற்றிபெறச் செய்வதற்கு இவர்கள் இருவரும் பாடுபட்ட தலைவர்களாவர். அமைச்சரவையிலிருந்து இவர்களை வெளியேற்றுவதற்கு எடுத்த தீர்மானம் கவலைக்குரியதாகும். இந்தத் தீர்மானத்துக்குக் கடும் கண்டனத்தை வெளியிடுகின்றோம்.

1970ஆம் ஆண்டு அரசு பாரிய வீழ்ச்சியடைந்தமையை நினைவுபடுத்துகின்றோம். கட்சியின் உள்ளக முரண்பாடுகளால் இந்த வீழ்ச்சி ஏற்பட்டது. அதன் பின்னர் அப்போதைய அரசு பாரிய தோல்வியடைந்ததோடு அவப்பெயரையும் பெற்றுக் கொண்டது.

இந்தக் கோட்டாபய அரசும் அவ்வாறான அவப்பெயருடனும் அழிவுடனுமே நிறைவுக்கு வரும். இவ்வாறான தீர்மானங்களால் ஒருபோதும் நாட்டில் தற்போதுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது - என்றார்.

## நான் 'ரீ' குடிக்க ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டிருக்கின்றது. இதன் பலாபலன்களை வெகுவிரைவில் அனைவரும் உணர்ந்துகொள்வார்கள். எமது பணி செயலில் காட்டுவதேயன்றி வாய் வீச்சில் காட்டுவதல்ல.

பிரதமரின் பெயரையோ பிரதமர் அலுவலகத்தின் பெயரையோ ஒருபோதும் நான் துஷ்பிரயோகப்படுத்துவதில்லை. பிரதமரின் தூரநோக்குத் திட்டங்களைச் செயலுருப்பெறச் செய்வதும் எமது அரசின் கொள்கைத் திட்டங்களை மக்கள் மயப்படுத்துவதுமே எமது தலையாய கடமையாகும்.

இதற்கு அரசியல் சாயம் பூசநினைப்பது அவரவரின் தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியேயன்றி வேறெதுவும் இல்லை. எனக்கு அரசியலுக்கு வரவேண்டிய எந்த விதமான அவசியமுமோ - விருப்பமோ அறவே இல்லை. அப்படியே அரசியலுக்கு வந்தாலும் நான் 'தவளை அரசியல்' செய்யமாட்டேன்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும், எக்காரணங்களுக்காகவும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ என்னைப் பணி நீக்கவில்லை. என்னுடைய பதிவுத்திருமணம், திருமணம் உட்பட அனைத்து சுப நிகழ்வுகளிலும் முதலில் வந்து தனது வாழ்த்துகளையும் ஆசியையும் வழங்குபவர் அமைச்சர் நாமல் ராஜபக்ஷதான். ஆகையினால் இதுவரை எமக்குள் எந்தவித கசப்புணர்வும் ஏற்பட்டதில்லை என்பதைப் பொறுப்புணர்வுடன் கூறிக்கொள்கிறேன்.

அர்த்தமற்ற, நகைப்புக்கிடமான குற்றச்சாட்டுக்களுக்கு பதில் வழங்கும் அளவுக்கு எனக்கு நேரமில்லை. என் மீது குற்றஞ்சாட்டுபவர் பிரதமரிடமும் ஜனாதிபதியிடமும் அமைச்சரிடமும் மாறிமாறி என்னைப் பற்றிப் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து வந்தார், வருகின்றார், வருவார். அவருக்கு எனது வாழ்த்துக்கள். - என்றார்.

## பஸிலுடன் மோதல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மத்திய வங்கி ஆளுநருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது எனவும், மத்திய வங்கி ஆளுநரைச் சந்திப்பதற்குக் கூட நிதி அமைச்சர் நேரம் ஒதுக்குவதில்லை எனவும் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பில் மத்திய வங்கியில் நேற்று (04) நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளித்த ஆளுநர்,

அவ்வாறு எந்த விரிசலும் இல்லை. நாட்டுக்குத் தேவையான திட்டங்கள் உரிய வகையில் வகுக்கப்பட்டு வருகின்றன - என்றார்.

## தமிழரசின் மகளிர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியத் தூதரகத்தின் அரசியல் ஆலோசகர் பானு பிரகாஸ் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மாத்தளையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் மக்கள் பலரும் கலந்துகொண்டு தத்தமது கையெழுத்துக்களைப் பதிவிட்டனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## காத்திருக்கும் பதிலடி

நாட்டின் மிக மோசமான நெருக்கடியிலிருந்து – பொருளாதார இக்கட்டிலிருந்து – நாட்டை மீட்டெடுப்பதற்கான மாற்றுத் திட்டம் என்ற பெயரில் ஆளும் பொதுஜன பெரமுன கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பதினொரு கட்சிகளும் முன்வைத்த யோசனைகளை –பரிந்துரைகளை – ஆட்சித் தலைமை பரிசீலனைக்கு எடுத்ததாகவோ கவனத்தில் கொண்டதாகவோ தெரியவில்லை. ஆனால் அந்த யோச னைத் திட்டத்தை – நிபுணத்துவ ஆலோசனையை – முன்வைத்த பிரதான கட்சித் தலைவர்களில் மூவரை அமைச்சரவையிலிருந்து தூக்கிக் கடாசியிருக்கின்றது அரசுத் தலைமை.

அந்த யோசனைத் திட்டத்தை சமர்ப்பிக்கும் நிகழ்வில் விமல் வீரவன்ஸவும் உதய கம்மன்பிலவும் தெரிவித்த கருத்துக்களை அவர்கள் இருவருடனும் சேர்ந்து வாசுதேவ நாணயக்காரவையும் அமைச்சரவையிலிருந்து வெளியேற வழி சமைத்துவிட்டது.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் முகத்திரையைக் கிழிப்போம் என்ற சாரப்பட உதயகம்மன்பில்ல வெளியிடும் கருத்து, இந்த மோதல் – முரண்பாடு – இத்துடன் அடங்கப் போவதில்லை, பெரும் அரசியல் கிளர்ச்சியாக உருவெடுக்கப் போகின்றது என்ற கருத்தையே தந்து நிற்கின்றது.

2015 ஜனவரி ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ மண்கவ்வி, அவருடன் பக்கத்தில் நின்ற ஏனைய அரசியல் தலைவர்கள் எல்லாம் மைத்திரிபால சிறிசேன பக்கம் நழுவியபோது, மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பக்கபலமாகவும் துணையாகவும் நின்றவர்கள் இந்த விமல் வீரவன்ஸவும் உதய கம்மன்பிலவும்.

மீண்டும் மஹிந்த ஆதரவுக் காற்று மெல்ல அசையத் தொடங்கிய போது பட்டிதொட்டியெல்லாம் தங்கள் பிரசார விற்பன்னத்தைக் காட்டி, அந்த அசைவை மறித்த ஆதரவுப் பெருங்காற்றாக மாற்றியவர்களுள் அவர்கள் இருவரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

இப்போது 'கோட்டாபய – பஸில்' என்ற சூறாவளி அந்த இருவரையும் வாசுவோடு சேர்த்து சூறையாடி, ராஜபக்ஷக்கள் முகாமிலிருந்து தூக்கிக் கடாச வைத்திருக்கிறது.

நிச்சயமாக விமல் வீரவன்ஸ – கம்மன்பில கூட்டு அடங்கிவிடப் போவதில்லை. புதிய காற்றுச் சூழலை அவர்கள் உருவாக்க எத்தனிப்பர். தம்மோடு புதிய அணிகளை – மக்கள் செல்வாக்குப் பெற்ற தலைவர்களை – உள்ளீர்த்து புதிய அரசியல் சூறைக் காற்றைப் பிரவகிக்க வைக்க அவர்கள் எத்தனிப்பர்.

அரசுக்கு எதிராக – அரசுத் தலைமையில் செயற்போக்கு நடவடிக்கைகளின் விளைவுகளை விமர்சித்து – கருத்து வெளியிட்டமைக்காக பெரிதும் மதிக்கப்பட்ட மூத்த அரசியல் பிரமுகரான சுசில் பிரேமஜயந்தாவிடமிருந்து இராஜாங்க அமைச்சுப் பதவியைப் பறித்தார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

அந்தப் பதவிப் பறிப்பு அமைச்சரவையிலும், அரசுக் கூட்டமைப்பிலும் இருந்து கொண்டு அரசுத் தலைமையையும் அரசையும் விமர்சிக்கும் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில்ல, வாசுதேவ நாணயக்கார போன்றோரும் தகுந்த எச்சரிக்கையாக இருக்கும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்பார்த்திருக்கக் கூடும். ஆனால் அது சரிவரவில்லை.

ஆனாலும் ஒன்று. ஜனாதிபதி கோட்டாபயவினால் அமைச்சுப் பதவி பறிக்கப்பட்ட சுசில் பிரேமஜயந்த ஆரவாரமில்லாத – அமைதியான – மதிக்கப்பட்ட ஓர் அரசியல்வாதி. தமது பதவிப் பறிப்பையொட்டி விசனத்துடன் சில கருத்துக்களைக் கூறிவிட்டு அமைந்துவிட்டார். ஆனால் விமல் வீரவன்ஸ – உதய கம்மன்பில ஆகியோர் அந்த வகையறாவைச் சேர்ந்தவர்கள் அல்லர். அவர்களை இப்படிப் பதவி நீக்கிய அதிரடிக்கு நிச்சயம் அரசியல் பதிலடி இருக்கும். ராஜபக்ஷக்களுக்கு தலையிடி தருவதாகத் தான் அது இருக்கும்.

# கொரோனாவை கட்டுப்படுத்துவது குறித்து இலங்கையின் செயற்பாடு பாராட்டத்தக்கது

## உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் புகழாரம்



கொவிட்-19 தொற்றை கட்டுப்படுத்துவதில் இலங்கை பின்பற்றும் முறையை உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் டெட்ரோஸ் அதானோம் பாராட்டினார்.

இது உலகிற்கு முன்மாதிரியாக இருந்தது என்றும் அவர் கூறியுள்ளார்.

கொவிட் கட்டுப்பாடு மற்றும் தடுப்பூசிகளில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தனிப்பட்ட ஈடுபாடு வைரஸைக் கட்டுப்படுத்த பெரிதும் உதவியதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமனவைச் சந்தித்த டெட்ரோஸ் அதானோம் தெரிவித்தார்.

இலங்கையில் சுகாதாரம் மற்றும் மருந்து உற்பத்தியை மேம்படுத்துதல் தொடர்பான விடயங்கள் தொடர்பாகவும் இருவரும் கலந்துரையாடினர். கொவிட்-19 இற்கு எதிரான தடுப்பூசியில் மற்ற நாடுகள் முன்னேற உதவுவதற்காக தடுப்பூசியில் இலங்கையின் வெற்றிக் கதையைப் பகிர்ந்து கொள்ளுமாறு டெட்ரோஸ் அதானோம் பேராசிரியர் ஜயசுமனவுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.



# வவுனியா மற்றும் முல்லைத்தீவு மக்களின் காணி விடுவிப்பு குறித்து கலந்துரையாடல்

ஜனாதிபதியின் ஆலாசனைக்கு அமைவாக வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் காணப்படும் திணைக்களங்களால் இதுவரை தீர்க்கப்படாமல் இருக்கின்ற பிரச்சினைகளை இனங்கண்டு அதனைத் தீர்த்து வைப்பதற்கான கலந்துரையாடல் ஒன்று வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கி நேற்று (வெள்ளிக்கிழமை) வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ச்சியாக முன்வைத்த கோரிக்கைகள் மற்றும் ஜனாதிபதி செயலகத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட வனவளத் திணைக்களத்தின் காணி தொடர்பான பிரச்சினைகள் என்பவற்றுக்குத் துரிதமாகத் தீர்வு காணும் முகமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைவாக வனவளப் பாதுகாப்பு அமைச்சர் சீ.பீ.ரத்நாயக்காவின் ஏற்பாட்டில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றதது.

இதன்போது வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மக்களது காணிகள், விவசாய நிலங்கள், அரச தேவைக்கான காணிகள் என்பவற்றை வனவளத் திணைக்களத்திடம் இருந்து விடுவித்தல் தொடர்பாக ஆராயப்பட்டதுடன், நீண்டகாலமாக வனவளத்திணைக்களத்தால் விடுவிக்கப்படாமல் இருந்த மக்களது காணிகள் தொடர்பிலும் ஆராயப்பட்டதுடன், உடனடியாகத்தீர்க்கப்படக்கூடியபிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டதுடன், ஏனைய வனவளத் திணைக்களத்துடன் தொடர்புடைய காணிப்பிரச்சினைகளை 2 மாத காலத்திற்குள் தீர்வு காண்பதற்கான படிமுறை ஒன்றும் உருவாக்கப்பட்டது.

வன ஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதான பதிரனவின் பங்கேற்புடன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான கு.திலீபன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள், மேலதிக அரசாங்க அதிபர்கள், இரு மாவட்டங்களின் பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள், வனவளம் தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

# டொலருக்கு 240 ரூபா வழங்கக்கோரி அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிப்பு?

அமெரிக்க டொலர் ஒன்றுக்கு 240 ரூபா வழங்குமாறு கோரி அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட உள்ளது.

எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த யோசனையை முன்வைக்க உள்ளதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

தமிழ் சிங்கள புத்தாண்டு காலத்தில் தங்களது உறவினர்கள் செலவு செய்வதற்காக வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்கள் கூடுதலாகப் பணம் அனுப்பி வைப்பது வழமையானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் நாட்டில் தற்பொழுது டொலர் பெறுமதி தொடர்பில் காணப்படும் நெருக்கடி நிலைமைகளால், வெளிநாடுகளில் பணியாற்றுவோர் சட்டத்துக்கு புறம்பான வழிகளில் பணம் அனுப்பி வைக்க முயற்சிக்கின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் அந்நிய செலாவணி கையிருப்பில் பாரியளவில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். குறைந்தபட்சம் ஒரு டொலருக்கு 240 ரூபா செலுத்தப்பட்டால் வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்கள் வங்கிக் கட்டமைப்புக்களின் ஊடாக சட்ட ரீதியாக பணம் அனுப்ப நடவடிக்கை எடுப்பார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்பொழுது அமெரிக்க டொலர் ஒன்றுக்கு 10 ரூபா வழங்கப்படுவதாகவும், இந்த தொகையை மேலும் 30 ரூபாவால் உயர்த்தப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு
Kalaikkathir
சனிக்கிழமை
05.03.2022

# அணுமின் நிலையத்தை கைப்பற்றியது ரஷ்யா



ஐரோப்பாவின் மிகப்பெரிய அணுமின் நிலையமாக கருதப்படும் சபோரோஷியா அணுமின் நிலையத்தை ரஷ்யா இராணுவம் தங்களது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உள்ளூர் அதிகாரிகள் மற்றும் உக்ரேனிய அணுசக்தி ஆய்வாளரின் கூற்றுப்படி, தென் கிழக்கு உக்ரைனில் உள்ள ஆலையின் கட்டுப்பாட்டை ரஷ்ய துருப்புக்கள் கைப்பற்றியுள்ளன. இந்த வசதியிலுள்ள ஊழியர்கள் அணுஉலையை தொடர்ந்து இயக்கி, சாதாரண பாதுகாப்பு விதிகளின்படி மின்சாரம் வழங்குகின்றனர் என ஆய்வாளர் கூறினார். வெள்ளியன்று அதிகாலை யில் ரஷ்யப் படைகள் ஆலையைத் தாக்கி, அருகில் இருந்த ஐந்து அடுக்கு பயிற்சி நிலையத்திற்கு தீ வைத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது

## உக்ரைனுக்கு எதிரான போரைக் கண்டித்து ரஷ்ய மக்களால் தொடர் போராட்டம்



உக்ரைனுக்கு எதிராக ரஷ்யா படைபெடுப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினின் சொந்த நகரமான செயின்ட் பீட்டர்ஸ்பெர்க்கில் ரஷ்ய மக்கள் சாலைகளில் இறங்கி போராட்டங்களில் ஈடுபட்டனர்.

முன்பு நடைபெற்ற போராட்டங்களில், பொலீஸார், கலவர தடுப்பு அதிகாரிகள் ஆகியோர் போராட்டக்காரர்களை வலுக்கட்டாயமாக அப்புறப்படுத்தினர். மேலும், டசின் கணக்கானோரை கைது செய்தனர். கடந்த சில தினங்களில் நூற்றுக் கணக்கான போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சிறையில் அடைக்கப்பட்ட எதிர்க் கட்சித் தலைவர் அலெக்சே நவால்னி இராணுவத் தாக்குதலுக்கு எதிராக தினசரி பேரணிகளுக்கு அழைப்பு விடுத்ததால், புதிய எதிர்ப்பு அலை உருவாகியுள்ளது. பயமுறுத்தும் கோழைகளின் தேசமாக ரஷ்யா இருக்கக்கூடாது என அவர் முன்னதாக கூறியிருந்தார்.



## சுவீடன் வான்பரப்பில் அத்துமீறிய நான்கு ரஷ்யப் போர்விமானங்கள்

சுவீடன் வான்பரப்பில் ரஷ்ய விமானங்கள் நுழைவதற்கு விதிக்கப்பட்ட தடையை மீறி புதன்கிழமை 4 ரஷ்யப் போர்விமானங்கள் தங்கள் வான் பரப்பில் நுழைந்தன என ஸ்வீடன் ஆயுதப் படைகள் தெரிவிக்கின்றன.

நேட்டோ உறுப்பினர் அல்லாத இந்த ஸ்கான்டினேவியன் நாடு தங்கள் வான் பரப்பில் ரஷ்ய விமானங்கள் நுழைய திங் கட்கிழமை தடை விதித்தது. ஐரோப்பிய நாடுகள் எடுத்த இதே போன்ற தடையைத் தொடர்ந்து சுவீடனும் இத்தகைய தடையைப் பிறப்பித்தது. இந்த அத்துமீறலை கண்டித்து சுவீடன் இராணுவம் அறிக்கை வெளியிட்டது. இது தொழில்முறையற்ற வேலை, பொறுப்பற்ற செயல் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், பால்டிக் கடலில் நடந்ததாக சொல்லப்படும் இந்த அத்துமீறல் சிறுது நேரமே நீடித்ததாக அந்த அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது.



## இரண்டாம் கட்டப் பேச்சும் தோல்வியில் புடினை நேரில் சந்திக்கிறார் ஜெலென்ஸ்கி?

உக்ரைன் மற்றும் ரஷ்யாவிற்கிடையில் நடைபெறும் போரை நிறுத்துவதற்கான இரண்டாம்கட்ட பேச்சில் துரதிர்ஷ்டவசமாக, உக்ரைனுக்குத் தேவையான முடிவுகள் இன்னும் எட்டப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. ரஷ்ய மற்றும் உக்ரேனிய பிரதிநிதிகள் நான்கு நாள்களில் இரண்டாவது சுற்று பேச்சுக்காக பெலாரஸின் பிரெஸ்ட் பகுதியில் கூடினர்.

உக்ரைன் தரப்பில் போர்நிறுத்தம் மற்றும் பொதுமக்களை வெளியேற்றுவதற்கான மனிதாபிமான நடவடிக்கைகள் என இரு விடயங்கள் வலியுறுத்தப்பட்டன.

ஆனால், பல மணிநேர பேச்சின் போது, பொதுமக்களை வெளியேற்றுவதற்கான மனிதாபிமான நடைக்கூடங்களை அமைப்பதற்கு மட்டுமே தீர்வு எட்டப்பட்டதாக ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சர் போடோலியாக் கூறினார்.

உக்ரைனில் இருந்து அனைத்து துருப்புக்களையும் ரஷ்யா திரும்பப் பெற வேண்டும் என்று உக்ரைன் அதிகாரிகள் முன்பு கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


பேச்சில் உடன்பாடு எட்டப்படாததால் விரைவில் மூன்றாம் கட்ட பேச்சு நடைபெறும் என தகவல் வெளியாகியுள்ளது. உக்ரைனுடனான எந்தவொரு சமாதான உடன்படிக்கையிலும் உக்ரைன் இராணுவமயமாக்கல் என்ற வாக்குறுதியை உள்ளடக்கியிருக்க வேண்டும் என்று ரஷ்யா தொடர்ந்து வலியுறுத்தும் என்று ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சர் கூறினார். உக்ரைன் ஒரு நடுநிலை நிலையை ஏற்றுக்கொள்வதைப் பற்றி விவாதிக்க விரும்புவதாகவும், வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பில் (நேட்டோ) சேருவதற்கான அதன் லட்சியங்களைக் கைவிட ஒப்புக்கொள்வதற்கும் ரஷ்யா விரும்புகிறது.

இதனிடையே, போரை முடிவுக்கு கொண்டு வர நடத்தப்பட்ட இரு கட்ட பேச்சும் தோல்வியிலே முடிந்துள்ள நிலையில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் நேரடி பேச்சுக்கு வரவேண்டும் என உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி அழைப்பு விடுத்துள்ளார்.

பேச்சு நடத்துவதே போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான ஒரே வழி எனவும் அவர் கூறியுள்ளார்.

## தாய்வானை சுதந்திர நாடாக அமெரிக்கா அங்கீகரிக்க வேண்டும்

### பாம்பியோ தெரிவிப்பு



தாய்வானை சுதந்திர நாடாக அமெரிக்கா முறையாக அங்கீகரிக்க வேண்டும் என அமெரிக்க முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் மைக் பாம்பியோ அழைப்பு விடுத்துள்ளார்.

தாய்வான் - தைபேயில் நிகழ்வொன்றில் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமெரிக்க அரசாங்கம் தாய்வானை சுதந்திர நாடாக அங்கீகரிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். தாய்வான் அமெரிக்காவின் இராஜதந்திர அங்கீகாரத்தை பெற்ற ஒரு சுதந்திர மற்றும் இறை யாண்மை கொண்ட நாடாக மாற வேண்டும் என தாய்வானின் சிந்தனைக் குழாம் ஒன்று ஏற்பாடு செய்த நிகழ்வில் இன்று பேசும்போது பாம்பியோ வலியுறுத்தினார்.

1979 இல் சீனாவுடனான அதன் ஏற்பாடுகளின் ஒரு பகுதியாக அமெரிக்கா தாய்வானில் இருந்து அதன் இராணுவப் படைகள் அனைத்தையும் விலக்கிக் கொண்டு, தைபே உடனான இராஜாங்க உறவுகளை முறித்துக் கொண்டது.

இந்நிலையில் சீனா மக்கள் குடியரசை ஒரு இறை யாண்மை கொண்ட அரசாங்கமாக அமெரிக்கா தொடர்ந்து மதிக்க வேண்டும் என்றாலும், சுதந்திரத்தை விரும்பும் 2.3 கோடி தாய்வான் மக்கள் மற்றும் அதன் சட்டப்பூர்வ, ஜனநாயக ரீதியாக தேர்ந் தெடுக்கப்பட்ட அரசாங்கத்துக்கான இராஜதந்திர அங்கீகாரத்தை அமெரிக்கா இனி புறக்கணிக்கவோ, தவிர்க்கவோ முடியாது என்று பாம்பியோ கூறினார். இந்நிலையில் தாய் வானை சுதந்திர நாடாக அமெரிக்கா முறையாக அங்கீகரிக்க வேண்டும் என அமெரிக்க முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் மைக் பாம்பியோ இன்று வெளியிட்ட கருத்து அபத்தமானது, முட்டாள்தனமானது என சீனா உடனடியாக கண்டித்தது.

பாம்பியோ ஒரு முன்னாள் அரசியல்வாதி. அவரது நம்பகத்தன்மை நீண்டகாலமாக திவாலாகி விட்டது. அத்தகைய நபரின் முட்டாள்தனமான பேச்சு வெற்றி பெறாது என சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின் கூறினார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கொரோனாத் தடுப்பூசி இலக்கை கடந்தது தமிழ்நாடு சுகாதாரத்துறை அமைச்சர் சுப்பிரமணியன் தெரிவிப்பு



சென்னை தேனாம்பேட்டையில் உள்ள டி.எம்.எஸ். வளாகத்தில் தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் சில தகவல்களை தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஜனவரி 16 அன்று தொடங்கி பல நிலைகளில் தடுப்பூசி செலுத்தப்பட்டு வந்தது. மத்திய அரசின் வழிகாட்டுநெறிமுறைகளைப்பின்பற்றி தமிழகம் முழுவதும் முதலில் முன்களப் பணியாளர்கள் மற்றும் 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் பின்பு, 40 வயதிற்கு மேற்பட்டவர்கள், 18 வயதிற்கு மேற்பட்டவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் என்று தனித்தனியே வகைப்படுத்தப்பட்டு அறிவிக்கப்பட்ட நாட்களில் நடைபெற்று வந்திருக்கிறது.

அதன்பிறகு 15 வயது முதல் 18 வயதினருக்கான தடுப்பூசி செலுத்தும் திட்டம், முன்னெச்சரிக்கை தடுப்பூசி செலுத்தும் திட்டம் எனப் பல நிலைகளில் கடந்த ஓராண்டாக தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்தில் தடுப்பூசி செலுத்துவது என்பது ஒரு இயக்கமாகவே மாறி நடைபெற்று வருகிறது.

வீடுகள் தோறும் தடுப்பூசி, ஊர்கள் தோறும் தடுப்பூசி, மெகா தடுப்பூசி முகாம்கள் என்று பல வாறாக தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. வாரந்தோறும் இதுவரை 22 மெகா தடுப்பூசி முகாம்கள் நடைபெற்று உள்ளன. நாளை 23ஆவது வாரமாக மெகா தடுப்பூசி முகாம் 50 ஆயிரம் இடங்களில் நடைபெறவுள்ளது. இம்முகாம்களில் முதல் தவணை தடுப்பூசி, இரண்டாம் தவணை தடுப்பூசி, முன்னெச்சரிக்கைத் தடுப்பூசி, 15 வயது முதல் 18 வயதினருக்கான தடுப்பூசி, கொவேக்சின் மற்றும் கொவிஷீல்ட் அனைத்து முகாம்களிலும் உறுதி செய்யப்பட்டு நடத்தப்படவிருக்கிறது.

கடந்த வாரம் குஜராத் மாநிலத்தில் 10 கோடி தடுப்பூசியை எட்டியதாக செய்திகள் வந்தன. ஏற்கெனவே இந்தியாவில் மகாராஷ்டிரா, உத்திரபிரதேசம், மேற்கு வங்காளம், மத்திய பிரதேசம், போன்ற பெரிய மாநிலங்களில் 10 கோடி தடுப்பூசிகள் இலக்கை எட்டியிருக்கிறது. தமிழ்நாட்டில் சற்று முன்பு வரை 10 கோடியே 30 ஆயிரத்து 346 தடுப்பூசிகள் நேற்று மாலை வரை செலுத்தப்பட்டிருக்கிறது. இந்த இலக்கை எட்டியிருப்பது மகிழ்ச்சி அளிக்கக்கூடிய செய்தியாகும்.

ஜனவரி 16 அன்று தொடங்கிய தடுப்பூசி தினந்தோறும் 61,441 என்ற அளவில் செலுத்தப்பட்டு வந்தது. மே 6 வரை 103 நாட்கள் வரை 63 லட்சத்து 28 ஆயிரத்து 407 தடுப்பூசிகள் செலுத்தப்பட்டிருந்தது. இப்போது 10 கோடி அளவில் தடுப்பூசி தமிழக மக்களுக்கு செலுத்தப்பட்டிருக்கிறது. இதுவரை முதல் தவணை தடுப்பூசி 91.54 சதவிகிதம் பேருக்கு, 5 கோடியே 29 லட்சத்து 91 ஆயிரத்து 453 பேருக்கு செலுத்தப்பட்டுள்ளது. இரண்டாவது தவணை தடுப்பூசி 72.62 சதவிகிதம் பேருக்கு, 4 கோடியே 20 லட்சத்து 39 ஆயிரத்து 903 பேருக்கு செலுத்தப்பட்டுள்ளது.

15 வயது முதல் 18 வயதினருக்கான தடுப்பூசி 33 லட்சத்து 46 ஆயிரம் பேருக்கு செலுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதில் முதல் தவணை தடுப்பூசி 83.19 சதவிகிதம் பேருக்கு 27 லட்சத்து 83 ஆயிரத்து 455 பேருக்கு செலுத்தப்பட்டுள்ளது. 28 நாட்கள் கழிந்தபின்பு, இரண்டாவது தவணை தடுப்பூசி 47.17 சதவிகிதம் பேருக்கு 15 லட்சத்து 78 ஆயிரத்து 771 பேருக்கு செலுத்தப்பட்டுள்ளது. முன்னெச்சரிக்கை தடுப்பூசி செலுத்தப்பட வேண்டியவர்கள் 8 லட்சத்து 45 ஆயிரத்து 289. இதில் 6 லட்சத்து 37 ஆயிரத்து 264 பேருக்கு 76.57 சதவிகிதம் பேருக்கு முன்னெச்சரிக்கை தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 24 மணிநேரமும் தடுப்பூசி 67 இடங்களில் அரசு தலைமை மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் வட்டார மருத்துவமனைகளில் செலுத்தப்படுகிறது. கையிருப்பாக 92 லட்சத்து 686 ஆயிரம் தடுப்பூசிகள் உள்ளன. 12 வயதினருக்கான தடுப்பூசி 21 லட்சத்து 60 ஆயிரம் தடுப்பூசிகள் வரப்பெற்றுள்ளன. மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகள் அறிவித்த பிறகு அத்தடுப்பூசிகள் செலுத்தப்படவிருக்கின்றன, என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

## பிரதமர் மோடி பொய்யின் அடிப்படையில் பிரசாரம் செய்கிறார் என்கிறார் ராகுல்



உத்தரப்பிரதேச சட்டசபை தேர்தல் கடந்த பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி தொடங்கி 7 கட்டங்களாக நடைபெற்று வருகிறது. ஏற்கனவே 6 கட்டங்களுக்கான வாக்குப்பதிவு முடிவடைந்தது. இறுதிக் கட்ட வாக்குப்பதிவு வரும் 7 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது. இதனால், உத்தரப்பிரதேசத்தில் ஆட்சியைப் பிடிக்கும் முனைப்பில் பா.ஜ.க., காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

உத்தரப்பிரதேச வாரணாசியில் உள்ள காசி விஸ்வநாதர் கோவிலில் பிரார்த்தனை செய்த பிறகு காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி மற்றும் காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி ஆகியோர் பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

அப்போது பிரசாரத்தில் உரையாற்றிய ராகுல் காந்தி, விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவதாகவும், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவதாகவும் தனது முந்தைய தேர்தல் வாக்குறுதிகள் குறித்து பிரதமர் மோடி இப்போது பேசவில்லை.

சத்தீஸ்கரில் காங்கிரஸ் அரசு விவசாயிகளின் கடன்களை தள்ளுபடி செய்யும் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றியது. ஒரு குவிண்டால் நெல் கொள்முதலுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையாக 2,500 ரூபாவாக நிர்ணயித்தது. பிரதமர் மோடி தர்மத்தின் பெயரால் அல்ல, மாறாக பொய்களின் அடிப்படையில் பிரசாரம் செய்கிறார். இந்து மத புத்தகங்கள் எங்கும் பொய் பேசவேண்டும் என்று கூறவில்லை.

பிரதமர் மோடியின் இரட்டை இயந்திரம் ஒன்று அதானி மற்றொன்று அம்பானி. இந்த வகையான இரட்டை இயந்திரம் ஒருபோதும் மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்காது.

பிரதமர் மோடியும், முதல்வர் யோகி ஆதித்யநாத்தும் உத்தரப்பிரதேச மக்களுக்கு வேலையில்லா திண்டாட்டம் மற்றும் விலைவாசி உயர்வு ஆகியவற்றுடன் மூன்றாவது பிரச்சினையாக தெருவில் சுற்றும் மாடுகளின் வடிவில் சேர்த்துள்ளனர், என்று குற்றச்சாட்டுகளை முன்வைத்திருக்கிறார்.

## கூட்டணிக் கட்சிகளுக்கான இடங்களில் வென்ற தி.மு.கவினர் பதவி விலக வேண்டுமென ஸ்டாலின் கடுமையான உத்தரவு

கூட்டணிக் கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் வென்ற தி.மு.கவினர் பதவி விலகாவிட்டால் அவர்கள் கட்சியில் இருந்து நீக்கப்படுவார்கள் என கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் எச்சரித்துள்ளார். தி.மு.க. தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நடந்து முடிந்த நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி பெற்ற வெற்றி மிகப்பெரிய மகிழ்ச்சியை அளித்தது.

இதைத் தொடர்ந்து, கூட்டணிக் கட்சிகளுக்குள் நடத்திய பேச்சு தோழமை உணர்வுடன் அமைந்து அனைவரும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளும் பங்கீடாக அமைந்ததும் அதிகளவு மகிழ்ச்சியை அளித்தது.

அந்த மகிழ்ச்சியைச் சீர்குலைக்கும் வகையில், மறைமுகத் தேர்தலில் சில இடங்களில் நடந்த நிகழ்வுகள் என்னை மிகவும் வருத்தமடைய வைத்துள்ளன. வெற்றியை நினைத்தே கவலை அடைய வைக்கிறது.




பேரறிஞர் அண்ணா சொன்ன கடமை - கண்ணியம் - கட்டுப்பாட்டில் மூன்றாவதாகச் சொல்லப்பட்ட கட்டுப்பாடுதான் மிக மிக முக்கியமானது என்று தலைவர் கலைஞர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். அந்தக் கட்டுப்பாட்டை சிலர் காற்றில் பறக்கவிட்டு தோழமைக் கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட பொறுப்புகளில் உட்கார்ந்திருக்கிறார்கள். ஏதோ சாதித்து விட்டோம் என அவர்கள் நினைக்கலாம். ஆனால் கழகத் தலைவர் என்ற முறையில் குற்ற உணர்ச்சியால் நான் குறுகி நிற்கிறேன்.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்களிடம், நான் எனது மிகுந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன். எந்தத் தோழமை உணர்வு நமக்கு மக்கள் மனதில் நல்லெண்ணம் உருவாக்கியதோ அந்த தோழமை உணர்வை எந்தக் காலத்திலும் உருக்குலைந்துவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறேன்.

கழகத் தலைமை அறிவித்ததை மீறி தோழமைக் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் போட்டியிட்டு வென்றவர்கள் உடனடியாக தங்கள் பொறுப்பை விட்டு விலக வேண்டும். விலகாவிட்டால் அவர்கள் கழகத்தின் அடிப்படை உறுப்பினரிலிருந்து நீக்கப்படுவார்கள் என்று கழகத் தலைவர் என்ற முறையில் எச்சரிக்கிறேன்.

உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு விட்டு, கழகத்தின் நற்பெயருக்கே களங்கம் விளைவித்தவர்கள் அந்தப் பொறுப்பை விட்டு விலகிவிட்டு, என்னை வந்து சந்தியுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள் இதற்குரிய நடவடிக்கையில் விரைந்து ஈடுபட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன், என்று வலியுறுத்தியிருக்கிறார்.

## கடைசி இந்தியரை மீட்கும் வரை நடவடிக்கை தொடரும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் அறிவிப்பு

ரஷ்யா-உக்ரைன் நாடுகளுக்கு இடையே நடைபெறும் போர் தீவிரமடைந்துள்ளது. உக்ரைனில் சிக்கியுள்ள இந்திய மாணவர்கள் நாடு திரும்பி வருகின்றனர். மாணவர்கள் உள்பட இந்தியர்களை மீட்கும் நடவடிக்கையாக ஒப்ரேஷன் கங்கா திட்டத்தை இந்திய மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. உக்ரைனின் அண்டை நாடுகள் வழியாக இந்திய மாணவர்களை மீட்கும் முயற்சி நடந்து வருகிறது. இந்த நிலையில் இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒப்ரேஷன் கங்கா திட்டத்தின் மூலமாக அடுத்த 24 மணி நேரத்தில் 16 விமானங்கள் உக்ரைனின் அண்டை நாடுகளுக்கு செல்லவுள்ளன. உக்ரைன் நாட்டு அரசாங்கத்திடம் இந்திய மாணவர்களை மீட்பதற்காக சிறப்பு புகையிரதங்களை இயக்கும்படி கேட்டிருந்தோம். ஆனால், இதுவரை அதுபற்றி எந்த தகவலும் இல்லை. அதனால் நாங்கள் பேருந்துகளை இயக்குகிறோம்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# திராய்க்கேணி கேணியை மூடும் விவகாரம் மக்களின் கருத்தறிந்து தீர்மானிக்க முடிவு!

## சமரசக் கூட்டத்தில் உடன்பாடு



(காரைதீவு நிருபர் சகா)

திராய்க்கேணி கேணியை மூடிய விவகாரம் தொடர்பாக அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் சமரச கலந்துரையாடல் ஒன்று பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

திராய்க்கேணி தமிழ்க் கிராமத்தின் பாரம்பரிய சலவைத்தொழிலுக்கான நீர்நிறைந்த கேணியை எவ்வித அனுமதியும் இல்லாமல் அட்டாளைச்சேனை பிரதேச சபைத் தவிசாளர் அத்துமீறி மூடிவருகின்றார் என பொதுநல அமைப்புகள் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளரிடம் சமர்ப்பித்த முறைப்பாட்டுக்கமைவாக இக்கலந்துரையாடல் இடம்பெற்றது. அம்பாறை மாவட்டத்தில் அட்டாளைச்சேனை பிரதேசசெயலாளர் பிரிவினுள் வருகின்ற ஒரேயொரு தமிழ்க் கிராமம் திராய்க்கேணிக் கிராமமாகும்.

இக்கிராம மக்கள் கடந்த காலங்களில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

பரம்பரை பரம்பரையாக இக்கேணியில் தமது சலவைத்தொழிலைச் செய்துவருகின்ற நிலையில் அப்பகுதி தவிசாளர் இவ்விதம் அராஜமாகச் செயற்படுகின்றார் என அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

பொதுமக்கள் அக்கரைப்பற்றுப் பொலிஸாரிடம் கொடுத்த முறைப்பாட்டையடுத்து அன்றைய தினமே பொலிஸார் அந்த இடத்திற்கு நேரில் சென்று மண் போட்டு மூடும் செயற்பாட்டை இடைநிறுத்தினர் எனக் கிராமத்தலைவர் சி.கார்த்திகேசு தெரிவித்தார்.

அதேவேளை திராய்க்கேணி பெரிய தம்பிரான்கோயில்பரிபாலனசபையினர் இந்த அத்துமீறி மண்நிரப்பும்செயற்பாடு குறித்து அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் தொடக்கம் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் வரை பலருக்கும் எழுத்துமூலம் முறைப்பாடு தெரிவித்திருந்தனர்.

அதன்படி பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற கலந்துரையாடலில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் சி.கார்த்திகேசு மற்றும் செயலாளர் கி.புவனேஸ்வரன், உப தலைவர் ஆகியோர் இணைத்துக் கொள்ளப்பட்டனர். அங்கு பிரதேச செயலாளர், தவிசாளர் உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

பிரதேசசபைக்குரிய இந்தக் கேணியை மக்களிடம் கேளாமல் அபிவிருத்தி செய்ய முயற்சித்தமை தொடர்பில் தவிசாளர் ஆரம்பத்தில் தனது மன வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டார்.

தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெற்றது. அக்காணியில் சிறுவர் பூங்கா அமைப்பதற்கும் அருகிலுள்ள சலவைத் தொழிலாளர் கட்டடத்தை புனரமைத்துத் தரவும் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக தவிசாளர் அங்கு கூறினார்.

அதற்கு, திராய்க்கேணி மக்களின் சார்பில் பிரதிநிதிகள் பதிலளித்தனர்.

'திராய்க்கேணி, பாலமுனை 06ஆம் பிரிவுக்குட்பட்ட ஸ்ரீ பெரியதம்பிரான் ஆலய பரிபாலன சபையினரின் கீழ் பராமரிக்கப்பட்டு வந்த சலவைத் தொழிலாளருக்குரிய குளத்தையும் சலவைத் தொட்டி உள்ள கட்டடத்தையும் பயன்படுத்தி மாரி காலங்களில் குளத்தில் வேலை செய்தும், கோடை காலத்தில் கட்டடத்தில் வேலைகளைச் செய்தும் பரம்பரை பரம்பரையாக தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். அங்கு கட்டடம் திருத்தப்படலாம். காணியில் புடைவைகள் காய வைக்க களம் அமைக்கலாம். ஆனால் சிறுவர்பூங்கா தேவையில்லை. எனவே எதுவானாலும் நாம் மக்களிடம் கேட்டே சொல்வோம்." – என்றனர்.

பிரதேச செயலாளர் தரப்பில் "அப்படியானால் 3 நாள் அவகாசம் தருகிறோம். மக்களிடம் அபிலாசைகளைக் கேட்டறிந்து சொல்லுங்கள். அதன் பிறகு இங்கு கூட்டத்தில் அதுபற்றிக் கூறி தீர்மானமெடுப்போம்" என்று கூறி முடிவெடுக்கப்பட்டது.

அதன்படி நேற்றும் இன்றும் திராய்க்கேணியில் மக்கள் கருத்துபெறப்பட விருந்ததாக தலைவர் சி.கார்த்திகேசு தெரிவித்தார்.

# பல்லினத்தவரும் இணைந்து பங்குகொண்ட இறக்காமம் பிரதேச கலை இலக்கிய விழா



(நூருல் ஹுதா உமர்)

2021 ஆம் ஆண்டுக்கான இறக்காமம் பிரதேச இலக்கிய விழா, கலாச்சார அதிகார சபையின் ஏற்பாட்டில் பிரதேச செயலாளரும் இறக்காமம் கலாசார அதிகார சபையின் தலைவருமான எம். எஸ்.எம். ரஷ்ஷான் தலைமையில் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் கடந்த புதன் கிழமை இடம்பெற்றது.

பிரதேச மட்டத்தில் இடம்பெற்ற கலை இலக்கியப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்கள் மற்றும் திறந்த பிரிவில் வெற்றியீட்டிய கலைஞர்களுக்கான சான்றிதழ்களும் பரிசுப் பொருள்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன. மேலும் இறக்காமம் கலாச்சார அதிகார சபைக்கு பங்காற்றிய கலாச்சார அதிகார சபையின் உப தலைவர் எஸ்.எல். நிஸார் (பிரதி கல்விப் பணிப்பாளர்), பொருளாளர் யூ.எல். ஜிப்ரி (ஆசிரியர்) ஆகியோருக்கு விசேட கௌரவமும் வழங்கப்பட்டது. நிகழ்வில் கலந்துகொண்டு கலை நிகழ்ச்சிகளை வழங்கிய மூத்த கலைஞர் கலாபூஷணம் பி.டி.யாசீன்பாவா, ஐ. ஹுசைன் றிஸ்வி, ஏ.எல். ஹாறூன், ஜனாபா. பர்சானா றியாஸ் ஆகியோரும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

2021 ஆம் ஆண்டுக்கான இறக்காமம் பிரதேச இலக்கிய விழா நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக, சது அமீரலிபுர வித்தியாலய மாணவர்களின் பொல்லடிக் குழுவினுடைய கிராமிய கோலாட்டம் இடம்பெற்றது. மேலும் மாணிக்கமடு கலைமன்றத்தின் தமிழ் பாரம்பரிய நடனமும் இடம்பெற்றது. எச். நதீகா குமாரியின் பயிற்றுவிப்பில் சிங்கள நடனக் குழுவினர், தங்கள் பாரம்பரிய கலாச்சார கண்டி நடனம் மற்றும் கலை நிகழ்ச்சிகளை அரங்கேற்றினர். நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அசாதாரண சூழ்நிலை காரணமாக 2021 ஆம் ஆண்டுக்கான இறக்காமம் பிரதேச இலக்கிய விழா வானது பிற்போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோதமாக முப்பது ஆடுகளை லொறியில் எடுத்துச் சென்றோர் கைது



உரிய அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாகக் கொண்டு செல்லப்பட்ட முப்பதுக்கும் அதிகமான வளர்ப்பு ஆடுகளை கல்முனை பொலிஸார் மீட்டுள்ளனர்.

அம்பாறை – கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெரியநீலாவணை பகுதியில் உள்ள பொலிஸ் சோதனை காவலரணில் இந்த ஆடுகளைக் கொண்டு வந்த லொறியுடன் இருவர் நேற்று மதியம் கைது செய்யப்பட்டனர்.

திருகோணமலை மாவட்டம் தோப்பூர் பகுதியில் இருந்து அக்கரைப்பற்று நோக்கிகொண்டுவரப்பட்ட முப்பதுக்கும் அதிகமான ஆடுகளே இவ்வாறு கல்முனைபொலிஸாரினால் மீட்கப்பட்டன.

இவ்வாறு சட்டவிரோதமாக வழித்தடை அனுமதிப்பத்திரமின்றி கால்நடைகளை லொறி ஒன்றில் அடைத்துக் கொண்டு சென்றமை தொடர்பிலான விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த ஆடுகளை சட்டவிரோதமாகக் கொண்டுசென்ற 47 வயது மற்றும் 59 வயதுடைய இரு சந்தேகநபர்களை கல்முனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# திருமலையை அண்டித் தாழமுக்கம்; காற்றும் மழையும் இருக்குமாம்!

தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பரப்பில் விருத்தியடைந்த தாழமுக்கம் திருகோணமலை கரையிலிருந்து 190 கிலோ மீற்றர் தூரத்தில் நிலை கொண்டுள்ளது என்று நேற்று முன்னிரவு அறிவிக்கப்பட்டது.

இது அடுத்து வரும் சில மணித்தியாலங்களில் ஓர் ஆழமான தாழமுக்கமாக இது வலுவடைந்து வடமேற்கு திசையில் இலங்கையின் கிழக்கு கரையை அண்மித்ததாக வட தமிழ்நாட்டுக் கரையை நோக்கி நகரக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் இடைக்கிடையே மழையுடனான வானிலை நிலவக் கூடும். அத்துடன் ஊவா மாகாணத்திலும் இரத்தினபுரி, அம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் பல இடங்களில் இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் நிலவுகின்றது.

வடக்கு மாகாணத்திலும் திருகோணமலை மாவட்டத்திலும் காற்றின் வேகமானது இடைக்கிடையே மணித்தியாலத்துக்கு 40 முதல் 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

# நாட்டின் இன்றைய நிலைக்கு காரணம் வாக்களித்த 69 லட்சம் மக்களே ஆவர்!

## இராதாகிருஷ்ணன் எம்.பி. சாடுகின்றார்



ஜனாதிபதியின் வெற்றியை பாற்சோறு சமைத்து கொண்டாடியவர்கள் இன்று பெற்றோல் பவுஸர் வருவதையும் காஸ் வருவதையும் பார்த்து பாற்சோறு பொங்குகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது என நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஹற்றனில் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இன்று இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற சூழ் நிலைக்குக் காரணம் ஜனாதிபதியோ, பிரதமரோ, அரசாங்கமோ அல்ல. வாக்களித்த 69 லட்சம் மக்கள் மற்றும் வாக்களிக்காத ஒரு கோடியே ஐம்பதாயிரம் மக்களே ஆவர்.

தலைவலிக்காக தலையணை மாற்றிய கதையாகவே அமைச்சர்களின் மாற்றம் இருக்கின்றது. இதன்மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியுமா? இதனையும் அரசாங்கம் அரசியலுக்காகவே பயன்படுத்துகின்றது.

உண்மையை பேசிய சுசில் பிரேமஜயந்த வெளியேற்றப்பட்டார். விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அப்படியானால் அரசாங்கம் உண்மையைப் பேசுபவர்களைப் பழி வாங்குகின்றதா அல்லது உண்மையைப் பேசுவதை நிறுத்திக் கொள்ளுமாறு ஏனைய அமைச்சர்களை அச்சுறுத்துகிறதா. இந்த அரசாங்கம் எந்தவொரு விடயத்திலும் முகாமைத்துவம் இல்லாமல் இருக்கின்றது. நோக்கம் இல்லாமல் இருக்கின்றது. எதற்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்பட வேண்டும் என்ற சிந்தனை இல்லாமல் இருக்கின்றது.

எதிர்க்கட்சியாகிய நாங்கள் அன்றே கூறினோம். மக்களுக்கு உண்ண உணவில்லை. கார்ப்பெட் பாதையைப் போடுவதால் அதனை உண்ண முடியுமா என்று கேள்வி எழுப்பினோம். அதற்கு அன்று நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளை ஏளனம் செய்தார்கள். ஆனால் இன்று முன்னாள் அமைச்சர் வீரவன்ஸ அந்தக் கேள்வியைக் கேட்கின்றார். இது தான் இன்றைய நிலைமை.

டீசல் இல்லாத காரணத்தால் பெருந்தோட்டத்துறை தொழிற்சாலைகள் இயங்க முடியாத நிலை, மின்சாரத் துண்டிப்பால் ஆடை தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இப்படி டீசல் இல்லாத காரணத்தால் முழு இலங்கையுமே பாதிக்கப்பட்டுள்ளது. போக்கு வரத்துத்துறை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே அரசாங்கம் எதற்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்பட வேண்டும் என்ற திட்டமிடல் இல்லாமல் இருக்கின்றது.

இந்த மிகவும் மோசமான நிலைக்கு காரணம் டொலர் இன்மையே.

டீசல் இன்மையால் நுவரெலியா மாவட்டத்தில் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தங்களுடைய பொருள்களை சந்தைக்கு கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வெளிமாவட்டங்களில் இருக்கின்றவர்களுக்கு மரக்கறிகள் பெற்றுக்கொள்வதில் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமை தொடருமாக இருந்தால் நாட்டில் பஞ்சம் ஏற்படுவதை யாராலும் தடுக்க முடியாது.

ஏற்கனவே அரசாங்கம் ஜெனிவாவில் யுத்தக் குற்றச்சாட்டுகளுக்கும், மனித உரிமை மீறல்களுக்கும் முகங்கொடுத்து வந்த நிலையில் இன்று புதிதாக அதிவணக்கத்துக்குரிய மெல்கம் கார்தினல் ரஞ்சித் அவர்களுடைய முறைப்பாடு, ரஞ்சன் ராமநாயக்க தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களாக ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார ஆகியோரின் முறைப்பாடு என பல புதிய பிரச்சினைகளை அரசாங்கம் சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது எனத் தெரிவித்துள்ளார்.

## 2 நாள்களில் மட்டும் வந்தனர் 7,000 சுற்றுலாப் பயணிகள்

ரஷ்யா மற்றும் உக்ரைன் மோதலால் சுற்றுலாத் துறை பாதிக்கப்படும் என்ற அச்சம் இருந்த போதிலும் மாதத்தின் முதல் இரண்டு தினங்களில் சுமார் 7 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

சுற்றுலாத்துறை அமைச்சால் நேற்று (வெள்ளிக்கிழமை) வெளியிடப்பட்ட தரவுகளின் அடிப்படையில் நாட்டுக்கு மார்ச் மாதம் முதலாம் திகதி 2 ஆயிரத்து 902 சுற்றுலாப் பயணிகளும், 2 ஆம் திகதி 3 ஆயிரத்து 994 சுற்றுலாப் பயணிகளுமாக 6 ஆயிரத்து 896 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

இது தொற்று நோய்க்கு பின்னரான சுற்றுலாத் துறையின் முன்னேற்றத்தை எடுத்துக்காட்டுகின்றது. இவர்களில் அதிகளவானோர் அண்டை நாடான இந்தியாவைச் சேர்ந்த சுற்றுலாப்பயணிகள் ஆவர்.

கொரோனா தொற்றுக்குப் பின்னர் 2022 பெப்ரவரி மாதத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 96 ஆயிரத்து 507 ஆக உயர்வடைந்துள்ளதுடன், இந்த வருடம் இன்றைய நாள் வரையில் ஒரு லட்சத்து 85 ஆயிரத்து 730 சுற்றுலாப்பயணிகள் வருகை தந்துள்ளனர். இதுவரையில் நாட்டுக்கு வருகைதந்த மொத்த சுற்றுலாப்பயணிகளில் 30 வீதமானோர் (29,703) ரஷ்யாவைச் சேர்ந்தவர்களாவர்.

இதற்கு அடுத்தபடியாக இந்தியாவைச் சேர்ந்த 25 ஆயிரத்து 763 சுற்றுலாப்பயணிகளும், ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த 18 ஆயிரத்து 782 சுற்றுலாப் பயணிகளும், ஜேர்மனியைச் சேர்ந்த 13 ஆயிரத்து 893 சுற்றுலாப்பயணிகளும் மற்றும் உக்ரைனை சேர்ந்த 13 ஆயிரத்து 893 பயணிகளும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

பெப்ரவரி இறுதி வரை ரஷ்யாவைச் சேர்ந்த சுற்றுலாப்பயணிகளே அதிகமாக வருகைதந்துள்ளனர்.

இருப்பினும் தற்போது ரஷ்யாவில் ஏற்பட்டுள்ள அமைதியின்மையினால் ரஷ்யாவில் இருந்து வருகை தரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை குறைவடைந்து இந்தியாவில் இருந்து வருகை தரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இம் மாதத்தில் முதல் 2 நாள்களிலும் இந்தியாவைச் சேர்ந்த 1,268 பயணிகளும் ரஷ்யாவைச் சேர்ந்த 885 பயணிகளும் ஜேர்மனியைச் சேர்ந்த 774 சுற்றுலாப் பயணிகளும் பிரித்தானியாவைச் சேர்ந்த 698 சுற்றுலாப்பயணிகளும், போலந்தைச் சேர்ந்த 381 சுற்றுலாப்பயணிகளும் வருகை தந்துள்ளனர்.

தற்பொழுது சுற்றுலாத்துறை பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருந்தாலும் இந்தியாவில் இருந்து வருகை தரும் சுற்றுலாப்பயணிகளின் ஆதரவுடன் சுற்றுலாத்துறை முன்னேற்றமடையும் என சுற்றுலாத்துறை சார்ந்த பெரும்பாலான வல்லுநர்கள் கூறுகின்றனர்.

## நிலைபேறான அபிவிருத்தியை மேலும் முன்னேற்ற உலக அமைப்புக்களிடம் டக்ளஸ் உதவி கோரல்

நிலைபேறான அபிவிருத்தியை மேலும் முன்னோக்கி கொண்டு செல்வதற்கு தொழில்நுட்ப ஒத்துழைப்புக்களையும் முதலீடுகளையும் உலக வங்கி போன்ற அமைப்புக்களிடம் இருந்து வரவேற்பதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.



இலங்கையின் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் ஆழ்கடல் மீன்பிடி மற்றும் நீர் வேளாண்மை துறைகளில் மேற்கொள்ளக் கூடிய நிலையான அபிவிருத்தி முகாமை தொடர்பாக உலக வங்கியால் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வு அறிக்கை வெளியிடப்பட்டது.

கொழும்பு, ஷங்கரில்லா நட்சத்திர விடுதியில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் -

இலங்கையின் கடற்றொழில் மற்றும் நன்னீர், பருவகால மீன் வளர்ப்பு, கடலட்டை வளர்ப்பு போன்ற நீர்வேளாண்மை சார்ந்த வளங்களை அடையாளப்படுத்தி ஒருங்கிணைப்பதன் மூலம் நிலைபேறான பொருளாதார நன்மைகளை ஏற்படுத்துவது தொடர்பான பல திட்டங்களும் பொறிமுறைகளும் கடற்றொழில் அமைச்சிடம் காணப்படுகின்றன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வழிநடத்தலில், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் ஆலோசனைகளுடன் திட்டமிடப்பட்டுள்ள இந்தப் பொறிமுறையை நடைமுறைப்படுத்துவதற்கான தொழில்நுட்ப ஒத்துழைப்புக்களையும் முதலீடுகளையும் உலக வங்கி போன்ற அமைப்புக்ளிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம்.

மேலும், பல்வேறு சவால்களுக்கு மத்தியில் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற சர்வதேச அமைப்புக்களின் எதிர்பார்ப்புக்களையும் சர்வதேச நியமங்களையும் பூர்த்தி செய்யும் வகையில் பலநாள் மீன்பிடிக் கலன்களின் தொழில்முறைகள் உட்பட கடற்றொழில்சார் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாக உருவாக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் புதிய ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்த இருப்பதாகவும் தெரிவித்தார்.

அதேபோன்று, நன்னீர் மற்றும் பருவகால மீன் வளர்ப்பு போன்ற நீர் வேளாண்மை மூலம் தற்போது மொத்த மீன் உற்பத்தியில் 17 வீதத்தினைப் பெற்றுக் கொள்வதாகத் தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், எதிர்வரும் 2025 ஆம் ஆண்டளவில் மொத்த உற்பத்தியில் சுமார் 30 வீத உற்பத்தியை நீர் வேளாண்மை ஊடாகப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கிறோம் எனவும் தெரிவித்தார்.

சர்வதேச சந்தையில் நல்ல வரவேற்பை பெற்று வருகின்ற கடலட்டை பண்ணைகளை உருவாக்குவதிலும் கடற்றொழில் அமைச்சு மேற்கொண்டு வருகின்ற செயற்பாடுகளை சுட்டிக்காட்டிய கடற்றொழில் அமைச்சர், கிளிநொச்சி மாவட்டத்தில் 6 கடலட்டை கிராமங்கள் ஊடாக சுமார் 355 பண்ணைகளை உருவாக்கியுள்ளமையையும், யாழ். மாவட்டத்தில் 19 கடலட்டை ஏற்றுமதிக் கிராமங்களை உருவாக்கி சுமார் 467 பண்ணைகளை உருவாக்கி இருக்கின்றமையையும் சுட்டிக்காட்டியதுடன் ஆழ்கடல் மீன்பிடியை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு மயிலிட்டித் துறைமுகம் உள்ளிட்ட துறைமுகங்கள் அபிவிருத்தி செய்யப்படுவதையும், பருத்தித்துறை, குருநகர், பேசாலை போன்ற தேவையான பிரதேசங்களில் புதிய துறைமுகங்களை அமைப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளையும் தெளிவுபடுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.03.2022இல் வெளியிடப்பெற்றது.